**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**

**NAGAPATTINAM.**

**C.C.01/2018** P.W. 16

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. பொய்யாமொழி | Father's Name . | |
| Village | : | Taluk : | |
| Caste | : | Calling : | |
| Religion | : | Age | : |
| Date | : 16.06.2022 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 16.06.2022

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்சமயம் சிபிசிஐடி நாகப்பட்டினத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.03.2017 ம் தேதி சிபிசிஐடி கு.எண்.2/2016 வழக்கில் ச/பி 323 இதச வழக்கில் வாதி சுகன்யாவுக்கும் அவர் மகளுக்கும் டிஎன்ஏ டெஸ்ட் செய்வற்காக உபகரணம் வாங்குவதற்கு 28.3.2017 ம் அன்று தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் அறிக்கை செய்து தபாலை பெற்று 30.3.2017 ம் தேதி சென்னை தடய அறிவியல் துறை அறிக்கை செய்து அவர்கள் கொடுத்த பரிசோதனை செய்யப்பட்ட கார்டை வாங்கிவந்து 31.03.2017 ந் தேதி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை.

இன்ஸ்பெக்டர் என்னிடம் நீதிமன்றத்தில் கொடுக்க சொல்லி கொடுத்த தபாலில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. முத்திரையிடப்பட்ட நீதிமன்றம் கொடுத்த கவரிலும் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
## NAGAPATTINAM.

**C.C.01/2018** P.W.17

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. ராஜேஷ் | Father's Name. | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 16.06.2022 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 16.06.2022

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்சமயம் நாகப்பட்டினம் போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 3.08.2016 ந் தேதி வேளாங்கண்ணி காவல் நிலைய உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது மாவட்ட காவல் அலுவலக நமணா மூலம் சி.17858/2016 ன் படி ADGPL & O சென்னை ஆர்சி நம்பர் 515/0605598 / கிரைம்3(2)2016 ன் படி நாள் 27.4.2016 ன் மூலம் தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி தெற்கு காவல்நிலையத்தில் இருந்து மாறுதலில் வரப்பட்ட தெற்கு காவல் நிலைய கு.எண்.380/2016 ச/பி 363 இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை பெற்று காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி 3.8.2016 ம் தேதி காலை 10 மணிக்கு வேளாங்கண்ணி காவல் நிலைய கு.எண்.206/2016 ச/பி 363 இதச படி மாறுதல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வேளாங்கண்ணி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.8 ஆகும். இது சம்மந்தமாக என்னை சிபிசிஐடி ஆய்வாளர் விசாரணை செய்தார்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை.

முதல் தகவல் அறிக்கையின் நகலை புகார்தாரருக்கு நகல் கொடுக்க வில்லை என்றால் சரிதான். மாறுதலாகி பதிவு செய்யப்பட்டதால் கொடுக்கவில்லை.

மாறுதலாகிவந்து பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை புகார்தாரருக்கு நகல் கொடுக்க கூடாது என்று சட்டத்தில் தடை ஏதும் இல்லை என்றால் சரிதான். தூத்துக்குடி தெற்கு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கையில் என்ன புகார் விபரம் இருந்ததோ அதே விபரத்தைதான் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையிலும் எழுதியிருக்கிறேன். ஏடிஜிபி அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற உத்தரவில் தூத்துக்குடி காவல் நிலைய முதல் தகவல் அறிக்கையில் சொன்ன விபரத்தை மாற்றாமல் அப்படியே பதிவு செய்ய வேண்டுமென்று உத்தரவு வந்தது என்றால் சரிதான். சம்பவ இடம் வேளாங்கண்ணி என்பதால் அந்த விபரத்தை அப்படியே பதிவு செய்தேன். எஸ்பி அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற உத்தரவு முத்திரையிடப்பட்ட தபாலில் வரவில்லை சாதாரணமாக பிரித்து பார்க்ககூடி தபாலில்தான் வந்தது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாளில் வேளாங்கண்ணி காவல் நிலைய ஆய்வாளர் பணியில் இருந்தார். எஸ்பி அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்ட கவர் ஆய்வாளருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் தபாலை பார்த்துவிட்டு நிலைய எழுத்தர் மூலமாக என்னிடம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சொன்னதால் நான் பதிவு செய்தேன். நான் மேலே சொன்ன விபரங்களை வேளாங்கண்ணி காவல் நிலைய ஆய்வாளர் விசாரித்தபோதும் சொன்னேன். ( சாட்சி மீண்டும் சிபிசிஐடி ஆய்வாளர் விசாரித்தாக கூறுகிறார்.) நான் தற்போது சாட்சியம் அளிக்க வந்திருப்பது சிபிசிஐடி பதிவு செய்த வழக்கிற்குதான் என்றால் சரிதான். சிபிசிஐடி ஆய்வாளரும் என்னை விசாரித்தார். சிபிசிஐடி ஆய்வாளர் விசாரித்தபோது நான் பதிவு செய்த வழக்கு சம்மந்தமான விபரங்களை சொல்லவதாக அவரிடம் சொன்னேன். சிபிசிஐடி காவல் நிலையத்தில் வைத்துதான் என்னை விசாரித்தார்கள். நான் வேளாங்கண்ணி ஆய்வாளர் சொல்லி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றும் வந்த தபாலை அவசரகதியில் பெற்று வழக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. சிபிசிஐடி போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**